විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூதிய/சுற்றுநிருபம்/2011 දිනය / திகதி / Date 18-02-2011

ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2009 (திருத்தம் 01)

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்,

**ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2009**
**அரச ஓய்வூதியத்தினை வங்கித் தொகுதிகளினூடாக நடைமுறைப்படுத்துதல்**
**(ஓய்வூதியர்களுக்காகத் தனிநபர்க் கணக்குகளைக் கொண்டு நடாத்துதல்)**

என்னால் வெளியிடப்பட்ட மேற்குறித்த சுற்றுநிருபத்தின் இலக்கம் 1 இன் கீழ் புது ஓய்வூதியர்களுக்காகத் தனி வங்கிக் கணக்கொன்றினைக் கொண்டு நடாத்தலைக் கட்டாயப் படுத்தியும், ஒன்றித்த கணக்குகளைக் (இணைந்த கணக்குகள்) கொண்டு நடாத்தலை படிப்படியாக நிறுத்தவும் கட்டளையிடப்பட்டுள்ளது. அதன் படி,

1. புதிய ஓய்வூதியக் கோவையொன்று கிடைக்கையில் தனிநபர் கணக்கொன்றினைக் (தனிக்கணக்கு) கொண்டு நடாத்தலைக் கட்டாயப்படுத்தல்.

2. வயது முதிர்ந்த ஓய்வூதியர்கள் இருப்பின் அவர்களுக்கு மிக இலகுவாகும் வண்ணம் அவர்களின் ஓய்வூதியத்தினை தபாலகங்களினூடாக வழங்கச் செய்தல். தபாலகங்களுக்கு செல்ல முடியாத ஓய்வூதியர்கள் இருப்பின் மாதாந்தம் கிராம அலுவலர் சான்றிதழின் அடிப்படையில் வேரொருவரிடம் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

3. பங்களிப்பாளர்கள் மற்றும் துணைவர் ஆகிய இருவரும் அரச அலுவலர்கள் அல்லது ஓய்வூதியர்களாகும் சந்தர்ப்பங்களில் அதாவது விசேட சந்தர்ப்பங்களில் மட்டும் தொடர்ந்தும் இணைந்த கணக்கொன்றினை நடாத்திச் செல்லச் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

தற்போது காணப்படும் இணைந்த கணக்குகளைத் தனிக் கணக்குகளாக மாற்றுகையில் ஓய்வூதியர்கள் முன்வைக்கும் சிக்கல்களைக் கருத்திற் கொண்டு தொடர்ந்தும் அவ் இணைந்த கணக்குகளை நடாத்திச் செல்ல வேண்டுமா? என்பது பற்றிப் பிரதேச செயலாளர்கள் தகுந்த முறையில் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமெனக் காட்டப்பட்டுள்ளது.

இக்கட்டளையினைத் தவறான முறையில் வரைவிலக்கணப்படுத்தி, அனைத்து ஓய்வூதியர்களுக்கும் கட்டாயமாகத் தனிக்கணக்கொன்றினைக் கொண்டு நடாத்துதல் வேண்டுமெனச் சில பிரதேச செயலாளர்கள் அறிவிக்கின்றார்கள் எனத் தினமும் எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் இணைந்த கணக்குகளைக் கொண்டு நடாத்துகையில் சிக்கலான நிலைமைகள் ஏற்படமாட்டாது.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

1. பங்களிப்பாளர் மற்றும் மனைவி ஆகிய இருவரும் ஓய்வூதியர்களாதல் மற்றும் இருவருக்காகவும் ஒரே கணக்கினைக் கொண்டு நடாத்துதல்.

2. அரச சேவையில் ஈடுபட்டுள்ள பிள்ளைகளுடன் இணைந்த கணக்கொன்றினைக் கொண்டு நடாத்துதல்.

3. மிக வயோதிபமடைதல், நோய்வாய்ப்படல் போன்ற காரணங்களினால் வேறு நபரொருவரின் உதவி அத்தியாவசியமாகும் சந்தர்ப்பங்களில் இணைந்த கணக்கொன்றினைக் கொண்டு நடாத்துதல்.

4. பிரதேச செயலாளர்கள் திருப்தியடைகின்ற காரணங்களை முன் வைக்கையில் இணைந்த கணக்கொன்றினைக் கொண்டு நடாத்துதல்.

5. அவ்வாறே தபாலக வசதிகள் அண்மித்துக் காணப்படின் கொடுப்பனவுகளைத் தபாலகங்களுக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்க முடியும்.

மேற்குறித்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் செயலாற்றுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

கே.ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 01. | ஜனாதிபதி செயலாளர் | - தகவலுக்காக |
| 02. | பிரதமரின் செயலாளர் | - தகவலுக்காக |
| 03. | செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | - தகவலுக்காக |
| 04. | செயலாளர் - நிதி அமைச்சு | - தகவலுக்காக |
| 05. | கணக்காய்வாளர் நாயகம் | - தகவலுக்காக |